Registered as a Newspaper

ரெலிபோன் வாங்க
ரெலிகுளோப்
இரவு பகல்
24 மணி சேவை
ரெலி : 25088
( 6 தொடர்புகள் )
R G. கட்டடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ரெலிபோன் பேச
ரெலிகுளோப்
இரவு பகல்
24 மணி சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
R. G. கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ சித்திரை மீ 18 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 21 (01-05-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY சதிர்:140

# யூனியன் பிரதேசம்: ஏற்கவே முடியாது!

## இந்தியக் குழுவுக்கு நீலன் விவரமாக விளக்கம்

கொழும்பு, மே 1

யூனியன்பிரதேச முறையை ஏற்க முடியாது. சமஷ்டி அரசமைப்பில் வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மொழி மாநில அமைப்பைத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்பார்க்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம், இணை அமைச்சர் திரு. சிதம்பரம் தலைமையிலான இந்தியக்குழுவிடம் இதைத் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டார்.

ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசு அமைச்சர்களைச் சந்திக்கும் முன்னர் இந்தியக் குழு டாக்டர் நீலன் திருச்செல்வத்துடன் பேச்சுக்களை நடத்தியது.

ஒபரோய் ஹோட்டலில் இப் பேச்சுக்கள் நேற்றுக் காலை நடந்தன. இணை அமைச்சர் திரு சிதம்பரம் தலைமையிலான இந்தியக்குழு உறுப்பினர்கள் அனைவரும் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஷிற்றும் அச்சமயம் சமுகமளித்து இருந்தார்.

இலங்கையின் புதிய யோசனையில் என்ன இருக்கிறது என்பது பற்றியோ, இந்தியா எவ்விதமான தீர்வுக்கு ஆதரவாக இருக்கும் என்பது குறித்தோ தூதுக்குழு எதனையும் தெரிவிக்கவில்லை.

திரு. நீலனிடமிருந்து விவரமான விளக்கத்தைத் தருமாறு கேட்டது.

ஒரு மணித்தியாலம் நீடித்த இச் சந்திப்பின் போது டாக்டர் நீலன் திருச்செல்வம் எடுத்துச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரவில் வானத் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 1

கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று மதியமும் நேற்று பின்னிரவு 10 மணியளவிலும் ஹெலிக் கொப்டரிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நகரில் இரவில் வானத் தாக்குதல் நடந்தது இதுவே முதல்தடவையாகும்.

## ஜனாதிபதி-சிதம்பரம் பேசியது......... என்ன?

### உஷ் இரகசியம்!

கொழும்பு, மே 1

சிதம்பரம் குழு பேசியது என்ன?

இனப்பிரச்சினைக்கான தீர்வில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதா?

புதிய யோசனைகளின் கூறப்பட்டிருப்பவை என்ன?

இப்படிச் சரமாரியாக உள்ளூர்ச் செய்தியாளர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டுச்செய்தியாளர்களும் ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸைக் கேட்டனர்.

நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்பட்டதா? என்றும் செய்தியாளர்கள் அமைச்சரைக் கேட்டனர்.

எல்லாக் கேள்விகளுக்கும் அமைச்சர் கூறிய ஒரே பதில்;

"உஷ்! எல்லாம் இரகசியம். இப்போதைக்கு ஒன்றுமே சொல்ல முடியாது"— இப்படி வாயில் விரலை வைத்துக் கூறினார், அமைச்சர்.

# மட்டக்களப்பில் மகளிர் பேரணி

## கைதாகி காணமற்போன இளைஞர் நிலையை கேட்டு

—மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர்: இரா. உதயகுமார்—

மட்டக்களப்பு, மே 1

கைதான பின்னர் காணமற்போனதாகக் கூறப்படும் 175 இளைஞர்களின் தாய்மார், மனைவிமார் நேற்றுக் காலை பேரணி ஒன்றை நடத்தினர்.

தங்கள் பிள்ளைகள், கணவன்மார்கள் நிலையை அறிவிக்குமாறு கேட்டு அவர்கள் அரச அதிபர் திரு. எம். அந்தோனிமுத்துவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

சுமார் 850 மகளிர் இந்த ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

ஆயுதப்படையினரால் கைதான பின்னர் காணமற்போனதாகக் கூறப்படும் இந்த 175 இளைஞரில் கிராம சேவையாளர் சொக்குபண்டா விமலதாஸ என்ற சிங்கள இளைஞரும் இருக்கிறார்.

காணமற் போனதாகக் கூறப்படும் இளைஞர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலும் அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இவர்கள் பற்றிய விபரங்களை 2 வாரங்களுக்குள் பெற்றுத்தர வேண்டும் என்று பேரணி சென்ற மகளிர் அரச அதிபரை வேண்டிக் கொண்டார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் 24 மணித்தியாலங்களுக்குள் அறிவிக்கப்பட வேண்டும்.

அப்பாவிகள் சுடப்படுவது நிறுத்தப்பட வேண்டும். வயது வந்த பெண்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு போகப்பட்டு இம்சிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

இப்படி மகளிர் சமர்ப்பித்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

மேலிடத்துக்கு மகஜரை அனுப்பி வைப்பதாக அரச அதிபர் உறுதியளித்தார்.

## கட்சித் தலைவர்களை இந்தியக் குழு சந்தித்தது

### டிக்ஷிற் இரவு விருந்து

கொழும்பு, மே 1

இந்தியக் குழு, நேற்றிரவு அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவருடனும் பேச்சுக்களை நடத்தியது.

இந்தியக் குழுவுக்கு இந்தியத் தூதர் திரு. ஜே. என் டிக்ஷிற் இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்தார்.

அந்த விருந்துபசாரத்தில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீற்றர்கெனமன், மக்கள் கட்சி செயலாளர் விஜய குமாரணதுங்க, லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியத் தூதுக்குழு சகல அரசியல் கட்சித் தலைவர்களுடனும் பேச்சுக்களை நடத்தியது.

## சிப்பாய்கள் சுட்டு கணேசபுரத்தில் ஒருவர் மரணம்

உருத்திரபுரம், மே 1

பத்துக்கும் அதிகமான கவச வாகனங்களிலும் கால் நடையாகவும் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட சிப்பாய்கள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் உயிரிழந்தார்.

மற்றும் இருவர் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சிப்பாய்கள் ஜெயந்திநகர் பக்கமாகச் சென்று கணேசபுரத்தை அடைந்தனர். அந்த சூட்டிலேயே ஒருவர் பலியானார்.

சைக்கிளில் வந்த இவர் சிப்பாய்களைக் கண்டதும் சைக்கிளைப் போட்டு விட்டு ஓடினார். அப்போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

கணேசபுரம் வயலுக்குள் வைத்து நூற்றுக்கணக்கில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டபோது வயலில் உழுது கொண்டு நின்ற விவசாயிகள் மாடுகளைக் கைவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இளைஞனின் பிரேதம் இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

உள்ளே
உதயன்
மே தினச்
சிறப்பிதழ்
★
பக்கங்கள்
மொத்தம் :
ஆறு

## இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தை நேற்று ஆரம்பமானது

### சிறிமாவுடனும் சந்திப்பு

கொழும்பு, மே 1

இனப் பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களை இந்தியக் குழு, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் நேற்றுப் பகல் நடத்தியது.

இந்தியக் குழுவுக்கு இணை அமைச்சர் பி சிதம்பரம் தலைமை வகித்தார்.

முன்னாள் வெளிபரவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி, சட்ட நிபுணர் திரு. பாலகிருஷ்ணன், வெளியுறவு அமைச்சு அதிகாரி ரஞ்சன் மத்தாய் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியுடன் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் பேச்சுகளில் கலந்து கொண்டார்.

வெளிவிவகார அமைச்சர் சாஹூல் ஹமீதையும் அமைச்சர் லலித் அத்துலத் முதலியையும் இந்தியக் குழு பின்னர் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியது.

நேற்றுமாலை சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் சந்தித்து இந்தியக் குழு பேச்சுக்களை நடத்தியது.

### சிறிமாவுடன் இன்று சந்திப்பு

கொழும்பு, மே 1

இணை அமைச்சர் சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழு, சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை இன்று காலை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தும்.

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இணைப்பாட்சி முறையில் அதிகாரப் பரவலாக்கல்

### தூதுக்குழுவிடம் வலியுறுத்து

கொழும்பு, மே 1

இணைப்பாட்சி முறைக்கு இணங்கக்கூடிய, முறையான அதிகாரப் பரவலாக்கல்தான் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முடியும்.

இவ்வாறு திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையிலான இந்து இளைஞர் சம்மேளன தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தை தொடர்பாக இந்திய இணை அமைச்சர் திரு. சிதம்பரம் தலைமையில் இலங்கை வந்துள்ள தூதுக்குழுவைச் சந்தித்தபோதே தமது கருத்தை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியா தனது செல்வாக்கையும் நல்லெண்ணத்தையும் பயன்படுத்தி உறுதியானதொரு தீர்வைக் காண உதவமுடியும் எனவும் இந்தியத் தூதுக்குழுவிடம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ்ப் பகுதிகளில் பெருந்தொகையான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதும் உடைமைகள் சேதமாக்கப்படுவதும் தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

பிரச்சினைக்குத் தீர்வு

(6ஆம் பக்கம் பார்க்க)

தொழிலாளர்
பெருமக்களுக்கு
உதயனின்
மே நாள்
வாழ்த்துக்கள்!

## அனுராவை அழைத்து ஜே. ஆர். பேசினார்

கொழும்பு, மே 1

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்காவுடன் ஜனாதிபதி ஜெயவர்த்தனா மந்திராலோசனை நடத்தினார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவரின் வார்ட் பிளேஸ் இல்லத்தில் திரு. அனுரா பண்டாரநாயக்கா அவரைச் சந்தித்துப் பேசினார்.

ஒரு மணித்தியாலம் வரை பேச்சுக்கள் நீடித்தன.

காணிக் குடியேற்றம் பற்றிய அதிகாரங்கள் தான், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது என்று திரு. ஜெயவர்த்தனா, திரு. அனுரா பண்டாரநாயக்காவிடம் சொன்னார்.

மாகாண சபை முறை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை — இப்படி திரு ஜெயவர்த்தனா, எதிர்க்கட்சித் தலைவரிடம் சொன்னதாகவும் தெரிகிறது.

மாலை 5. 30 மணியளவில் இருவரும் சந்தித்தனர்.

## சிப்பாய்கள் சூட்டில் குழந்தை பலி!

### வளலாயில சம்பவம்

நல்லூர், மே 1

வளலாய்ப் பகுதியில் சிப்பாய்கள் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

குழந்தையொன்று பலியானது. இருவர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை பத்து மணியளவில் தொண்டமானாற்றில் இருந்து பலாலிக்கும், பலாலியிலிருந்து தொண்டமானாற்றுக்கும் சிப்பாய்கள் நடைபவனியாகச் சென்றனர்.

இவர்கள் இருசாராரும் வளலாய்ப் பகுதியில் சந்தித்துக் கொண்டபோது வயல் வெளிகளில் வேலை செய்து கொண்டிருந்தோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்

(6]ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானுடன் நேற்று சந்திப்பு இல்லை

கொழும்பு, மே 1

இந்தியக் குழு, அமைச்சர் தொண்டமானுடன் நேற்று நடத்த இருந்த சந்திப்பு கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது

வெள்ளிக்கிழமை (நாளை) காலைதான் அமைச்சர் தொண்டமானை இணை அமைச்சர் பி சிதம்பரம் தலைமையிலான குழு சந்திக்கும்.

நேற்றைய சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டதனால் அமைச்சர் தொண்டமான் நேற்று நடத்த இருந்த செய்தியாளர் மாநாடும் ரத்துச் செய்யப்பட்டது.

முச்சந்தி முனி



இன்டைக்கு, மே தினம் எல்லோ, என்னை மேதின வாழ்த்துக்களை தொழிலாள நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடாநாட்டில் 2 ஆவது நாள்:

## இளைஞர்கள் கோஷ்டி மோதல் வெளி மாவட்டங்களுக்கும் நேற்றுப் பரவியது

யாழ்ப்பாணம், மே 1

இரண்டு இளைஞர் அணிகளுக்கு இடையில் குடாநாட்டில் நேற்று முன்தினம் வெடித்த மோதல் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் உட்பட தமிழ்ப்பகுதிகள் பலவற்றிற்கும் நேற்றுப் பரவியது.

குடாநாட்டிலும் நேற்று இரண்டாவது நாளாக பல பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றன.

நேற்றைய மோதல்களில் மேலும் நடுவில் அகப்பட்டுக் கொண்ட அப்பாவிப் பொதுமக்கள் சிலர் உயிரிழந்தனர்.

கோஷ்டி மோதலில் பலர் கொல்லப்பட்டதாகவும்—

பலர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் சில தகவல்கள் கிடைத்துள்ளன.

எனினும் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கையையோ—

அல்லது உயிருடன் பிடிக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்களோ ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

இளைஞர் கோஷ்டியினர் சிலர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் சிலவீடுகள் தாக்கப்பட்டு பின்னர் தகர்க்கப்பட்டதாகவும் அறிய வருகிறது.

கல்வியங்காடு, கட்டைப்பிராய், நல்லூர், மல்லாகம் பகுதிகளிலேயே நேற்று மோதல்கள் மும்முரமாக நடந்தன.

கச்சேரியடியில்

கச்சேரி பழைய பூங்கா வீதியில் செவ்வாய்க்

(6 ஆம் பக்கம் பார்க்க

## சுபநேரம்

01- 5- 1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7.87 முதல் 8 57 வரை
ராகுகாலம்:
1.27முதல் 2.57 வரை
இன்று பகலும் இரவும் சேர்ந்தும்
அட்டமி பின்னிரவு
1 88 வரை

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

துன்பமும் கடவுள் தந்த பரிசே. துன்பத்தையும் கடவுட் கருணையின் சின்னமாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

— அன்னை சாரதாதேவி


# உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 01-05-86 தொலைபேசி: 24805 22073 த. பெ. 23


## மே தின சங்கற்பம்

இன்று மே தினம். மேதினி எங்கும் உள்ள சகல தொழிலாளர்களுக்கும் திருநாள். கண்டம், பிராந்தியம், நாடு, பிரதேசம் என்ற பேதமில்லாமல் அகில உலகிலும் உள்ள கோடானு கோடி தொழிலாளர்கள் நினைவு கூரும் பெருநாள்.

மே தினம் கொண்டாடத் தொடங்கி இன்றோடு நூறு வருடங்கள். அதனால் இன்றைய மேதினம் ஒரு யுக சரித்திரத்தின் — புதிய சகாப்தத்தின் — மைல் கல்லாகவும் விளங்குகிறது.

சிக்காக்கோ நகரில் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய தொழிலாளி ஒருவர், நூறு வருடங்களுக்கு முன்னர் எழுப்பிய புரட்சிக் குரல் அகில உலகிலும் உள்ள தொழிலாளர் வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

ஒரு நாளில் எட்டு மணித்தியாலயங்களுக்கு மேல் வேலை செய்ய மாட்டேன் என்று அந்தச் சிக்காகோ தொழிலாளி எழுப்பிய குரலால் இன்று உலகத் தொழிலாளர் பல நலன்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர் வழியில் பல உரிமைகளை, சலுகைகளைப் போராடிப் பெற்றிருக்கிறார்கள்.

நூறாண்டுகளுக்கு முன்னர் வெறும் அடிமைகளாக இருந்த தொழிலாளிக்கும் இன்றைய தொழிலாளிக்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள். நூறாண்டு காலமாக, வருடாந்தம் புதிய புதிய நலன்களைத் தொழிலாளர்கள் பெற்று வருகின்றனர்.

தொழிலாளர்கள் நிர்வாகிகளாகவும், நிறுவனங்களின் பங்குதாரர் ஆகவும் உயர்ச்சி அடைந்திருக்கிறார்கள். வாழ்க்கையை பலப்படுத்தும் நலன்புரி, வைத்திய, காப்புறுதித் திட்ட வசதிகளும் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. பல நாடுகளில் தொழிலாளர்கள் அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்களாகவும் விளங்குகிறார்கள். ஆட்சிக் கட்டிலில் இருந்து கோலோச்சவும் செய்கிறார்கள்.

எமது நாட்டைப் பொறுத்த மட்டில் அந்த நிலைமை திருப்திப்படக் கூடிய அளவுக்கு இன்னும் வந்துவிடவில்லை.

பல தொழில் நிலையங்களில் தொழிலாளர் இன்னமும் வேலை வாங்கப்படுகிறார்கள். வேறு பல விதங்களாலும் சூறையாடப்படவும் செய்கிறார்கள்.

முதலாளி — தொழிலாளி இடைவெளி நீண்டு கிடக்கிறது. அது குறைக்கப்பட வேண்டும். அதற்கு சமூக, பொருளாதார மாற்றங்கள் அவசியம். உழைக்கும் மக்களை உயர்த்த வேண்டும் என்ற மனப்போக்கும் எழுச்சியும் அவசியம்.

மேதினம் வெறும் தொழிலாளர் தினமாக மட்டுமன்றி, ஒடுக்கப்பட்ட மக்களினது பேரணியும் ஆகிவிட்டது.

அந்த வகையில் ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு மே தினம் மிகவும் விசேஷமான நாளாகும். உரிமைகளை ஒன்றுபட்டு நின்று நீதியான போராட்டங்கள் மூலம் வென்றெடுக்க முடியும் என்பதற்கு மே தினம் ஒரு எடுத்துக்காட்டு.

உழைப்பாளிகள் தமது கைகளை ஒன்று சேர்த்து உரிமைகளைப் பெற்றது போல, தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து தமது உரிமைகளைப் பெறுவதற்கு மேதினம் ஒரு தூண்டுதல் நாளாக இருக்க வேண்டும்.

சாதி, சமய, வர்க்க, இயக்க வேறுபாடுகளைத் தூக்கி வீசிவிட்டு ஒரே அணி நின்று எமது உரிமைகளுக்குப் போராட வேண்டும். அதனையே எமது மே தின சங்கற்பமாகவும் கொள்ள வேண்டும்.

## உணவு முத்திரை பூர்வாங்க வேலைகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 1

வறுமை நிவாரணச் சட்டத்தின் கீழ் உணவு முத்திரை வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

படிவம் 'பி' பெற்றுக் கொண்டவர்கள் மே மாதம் 7 ஆம் திகதிக்கு முன் கிராம சேவகரிடம் ஒப்படைக்க வேண்டும். ஒப்படைத்ததற்கான பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

படிவம் 'பி' பெற்றுக் கொள்ளாதவர்கள் அவ்வப்பகுதி வறுமை நிவாரண குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வசிப்பிடங்களை விட்டு குடி பெயர்ந்தவர்களும், படிவங்களை ஒப்படைக்க முடியாதவர்களும் அப்பகுதி உதவி அரசாங்க அதிபரின் ஆலோசனையை நாடும்படி கோரப்பட்டுள்ளனர்.

### விடுவிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 1

கடத்தப்பட்ட திரு. பொன். மகிழுசராசாவை விடுதலை செய்யுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர் அமைப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து உழைத்த சமூக சேவையாளனை, இனத்தின் நலன் கருதி, எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு நல்லூர் கூட்டணி அமைப்பாளர் திரு வே. அப்பையா கேட்டுக் கொண்டுள்ளார்.

### திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 1

புதுக்குடியிருப்பு ஐக்கிய சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா, எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

முன்னாள் ஐக்கிய நாணய சபை அங்கத்தினர் இக்கட்டடத்தை திறந்து வைப்பார்.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக முன்னாள் தீவு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலாவும் சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் கே. குலேந்திரா, நெட்டாறு இட்ட இணைப்பாளர் ஏ ஜி எஸ் பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

# 'காலிஸ்தான்' பிரகடனம்

## அறிவற்ற அசட்டுத்தனம் என்கிறார் பர்னாலா

புதுடில்லி, ஏப்30

சீக்கிய நெறிகள் குழு என தம்மைக் கூறிக்கொள்வோர் அறிவித்துள்ள 'காலிஸ்தான்' பிரகடனம் அசட்டுத்தனமான அறிவற்றசெயலாகும்.

இவ்வாறு பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலா 'காலிஸ்தான்' பிரகடனத்தைக் கண்டித்துள்ளார்.

சண்டிகாரில் வைத்து பர்னாலா தெரிவித்தவை கண்டனத்தில்;

"பொற்கோயிலின் ஒரு பகுதியை அத்துமீறி தம்வசம் வைத்துள்ள தீவிரவாதக் குழுவினர் மிகப் பலவீனமடைந்த நிலையில் இருக்கின்றனர்.

இந்த நிலையிலுள்ள அவர்களின் நம்பிக்கை இழந்த போக்கு இந்தப் பிரகடனத்தின் மூலம் வெளிப்படுகிறது.

இந்தப் பிரகடனம் வெளிநாட்டுச் சக்திகளின் தூண்டுதலால் செய்துகொள்ளப்பட்டதாகும்.

பஞ்சாப் மக்கள் தனிநாட்டை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநில ஆளுநர் சித்தார்த்சங்கர்ரே உட்பட மாநில அரசு அமைச்சர்கள் 6 பேரும் மற்றும் சட்டசபைப் பிரதிநிதிகள் பலரும் இந்தப் பிரகடனத்தைக் கண்டித்துள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்துக்கு வெளியிலுள்ள சீக்கிய அமைப்புகள் பலவும் இந்தப் பிரகடனத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆந்திர முதல்வர் ராமராவும் மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசுவும் பர்னாலாவுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

பஞ்சாப் அமைச்சரவை அவசரமாகக் கூட்டப்பட இருப்பதாகவும் மேற்கொண்டு எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் நிருபரிடம் கடாபி

லண்டன், ஏப். 30

திரிபோலி மீது அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலின் போது கடாபிமயிரிழையில்தான் உயிர் தப்பினார்.

இத்தாக்குதல் சம்பவம் பற்றி பிரிட்டிஷ் நிருபருக்கு கடாபி கூறுகையில்:

எனது வாசஸ்தலத்தின் மீது தாக்குதல் நடைபெற்றபோது நானும் எனது குடும்பத்தினரும் ஆழ்ந்த துக்கத்திலிருந்தோம்.

எனது மனைவியோ கொல்லாத நோய் காரணமாக படுக்கையில் பல நாள் கிடந்தாள்.

இத்தாக்குதலில் எமது 16 மாத வளர்ப்பு மகள் கொல்லப்பட்டார். இரு மகன்மார் காயமடைந்தனர்.

## மருந்துக் கடையில் பறவைக் கூடு திருட்டு
### குற்றவாளிகள் இருவருக்கு 7 வருட சிறைத்தண்டனை

ஹொங்கொங், ஏப்ரல் 30

பறவைக் கூட்டைத் திருடிய குற்றத்துக்காக இரண்டு சீனர்களுக்கு தலா 7 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மருந்துகள் விற்பனைக் கடையொன்றில் இருந்து திருடப்பட்ட இப்பறவைக்கூட்டின் பெறுமதி 6,4000 அமெரிக்க டொலர்கள் என்று கூறப்படுகிறது.

இந்தப் பறவைக் கூடு மூலிகை வைத்திய நிபுணர்களால் சக்திவாய்ந்ததொரு மருந்தாக நம்பப்படுகிறது.

சீன உணவுகளில் செல்வாக்குமிக்க விருந்துப் பானமாகத் தயாரிக்கப்படும் சூப் இந்தப் பறவைக் கூட்டிலிருந்துதான் தயாரிக்கப்படுகிறது.

## நவோதய பள்ளிகளில் இந்தி பாடமொழியா?
### தமிழ் நாடு எதிர்க்கும் என்றார் எம். ஜி. ஆர்

சென்னை, ஏப். 30

மத்திய அரசு அமைக்கத் திட்டமிடும் நவோதய பாடசாலைகளில் இந்தி பாட மொழியாக இருக்குமானால் நாம் வன்மையாக அதை எதிர்ப்போம்.

இவ்வாறு தமிழ் நாடு முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி தேசிய வளர்ச்சிச் சபை மாநாட்டுக்கு அவர் தெரிவித்த கருத்திலேயே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழ் நாட்டில் பிறமொழி மாணவர் கல்வி பயிலும் வசதிக்காக ஆங்கிலம் பாடமொழியாக ஏற்றுக்கொள்ளப்படும். இந்தி அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய வளர்ச்சி சபை மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ராஜீவ்;

எதையும் திணிக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்றார்.

### மூத்திர கோசத்தில் கல்வளர்ச்சி

பொஸ்டன், ஏப். 30

மூத்திரகோசத்தில் ஏற்படும் கல்வளர்ச்சி எந்தளவு வேகத்தில் ஏற்படுகிறது என்பதை கலிபோர்னியாவைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

கல் வளர்ச்சியால் ஏற்படும் வேதனையை ஒரு நோயாளி அடைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இந்தக்கற்களின் அளவு பெருத்துவிடுகிறது.

காபன் 14 முறையை விட மிகச் செலவு குறைந்த இச்சைமுறை ஒன்றைக் கண்டு பிடிப்பதன்மூலம் அந்தக் கற்களைக் கரைத்துவிட முடியும் என அந்த வைத்தியர்தமது ஆய்வில் தெரிவித்துள்ளார்.

# வெளி உலகில்

## பசுப்பால் விற்பனைக்கு போலந்தில் தடை
### ரஷ்ய அணு உலை விபத்துக் கதிர்வீச்சால் புற்றரைகள் நஞ்சேறியதாக அச்சம்

லண்டன், ஏப்ரல் 30

போலந்தில் பசுப்பால் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

போலந்தின் புற்தரைகள் அணுக்கதிர் வீச்சினால் நஞ்சூட்டப்படிருக்கலாம் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

ரஷ்யாவில் அணு உலை ஒன்றில் ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்து அணு கதிர்வீச்சு அபாயம் அயல் நாடுகளில் ஏற்பட்டுள்ளது.

கதிர்வீச்சு அபாயம் தொடர்பாக போலந்து ரஷ்யாவைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

டென்மார்க், நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளும் இதே விடயத்தில் ரஷ்யாவைக் கண்டித்துள்ளன.

முதலில் கதிர்வீச்சு அபாயத்தை மறுத்த ரஷ்யா இப்பொழுது அதை ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 2 பேர் இறந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் ரஷ்ய தொலைக்காட்சி அறிவித்தது.

வேறு நாடுகளில் இது போன்ற விபத்துக்கள் பல ஏற்பட்டுள்ளன என்று தெரிவித்த அந்த செய்தி ரஷ்யாவில் இப்படியான விபத்து ஏற்பட்டது இதுதான் முதல் முறை என மேலும் குறிப்பிட்டது.

விபத்து நடந்த இடத்துக்கு அண்மையில் வாழ்ந்த மக்கள் தூர இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★செல்வச்சந்நிதியில்

## பூஜைக்குத் தடையாக இருப்பது இராணுவ முகாமே
### அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், மே 1

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் மீண்டும் பூஜை வழிபாடுகளை ஆரம்பிப்பதற்குத் தடையாக இருக்கும் கஷ்டங்கள் பற்றி

ஆலய நடவடிக்கைக் குழு, யாழ் அரச அதிபருக்கு மகஜர் ஒன்றைக் கையளித்து உள்ளது.

மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

1. தொண்டைமானாறுப் பகுதியில் இருந்து மக்களை வெளியேறும்படி ஆயுதப் படையினர் விடுத்த உத்தரவு வாபஸ் வாங்கப்படவில்லை. மக்கள் அயற் கிராமங்களில் அகதிகளாக உள்ளனர். இதனால் குருமார் சொந்த வீடுகளில் வாழ்வது முடியாத காரியம்.

2. மேற்குக் கரையில் முகாம் தொடர்ந்து இருப்பது, ஆலயத்தின் மூன்று முக்கிய கிரியைகளைச் செய்ய முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. மாணிக்க தீர்த்தம், வள்ளியம்மன் தீர்த்தம், ஆற்றுத் தீர்த்தம் நடத்தப்படவேண்டிய முக்கிய கிரியைகள். இவை இன்றி நித்திய பூஜைகளை நடத்துவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத காரியம்.

3. ஆலயத்தின் பிரதான பகுதியைத் திருத்தஞ் செய்ய முடியாத நிலை நிலவுகிறது. 20 தினங்கள் வரை இந்த வேலைகள் இடம்பெறும். வேலை செய்பவர்களுக்கு பாதுகாப்பளிப்பது தான் எமக்கு அச்சத்தைத் தருகிறது.

4. பிரதான திருத்த வேலைகள் முடிந்த பின்னர்தான் பிராயச்சித்தக் கிரியைகள் செய்ய வேண்டும். அக்கிரியைகள் 10 தினங்கள் வரை நடத்தப்பட வேண்டும்.

5. மடங்களும் திருத்தப்படவேண்டும். அன்னதானமும் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். அன்னதானம் ஆலயத்தோடு சம்பந்தப்பட்ட விவகாரம்.

6. புதிய கண்டாமணி அமைக்கப்படவேண்டும். பூஜை நடக்கும்போது மணி அடிக்கப்படவேண்டியது அவசியம்.

இவைகளைச் செய்ய சுதந்திரமான நடமாட்டம் அப்பகுதியில் இருக்க வேண்டும். ஆயுதப்படை இருக்கும்வரை இது சாத்தியமான காரியம் அல்ல.

ஆகவே முகாமை அகற்றுவதுதான் முதல்வேலை.

அதன் பின்னர்தான் பூஜைகளை ஆரம்பிக்க முடியும்.

இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## உழைப்பாளர் உரிமைகளுக்கு குரல் கொடுப்போம்
### அன்னையர் முன்னணி செய்தி

உலகெங்கிலுமுள்ள உழைக்கும் மக்களின் இம் மேதினத்தில் அன்னையர் முன்னணியினராகிய நாம் தொழிலாளர் மகத்துவத்தைப் போற்றுவதிலும், உழைப்பாளர் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதிலும் அவர்களுடன் இணைந்து கொள்கிறோம்.

மே தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் அன்னையர் முன்னணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-


இலங்கையில் இன்று தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக அதிகரித்து வரும் அரச வன்செயல்களால் அதிக அளவில் மிகவும் மோசமாகப் பாதிப்பு அடைபவர்கள் இப்பிரதேசங்களில் வாழும்ஏழை விவசாயிகளும், மீனவர்களும், மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளரும் கடற்றொழிலாளருமாவர்.

கடற்றடை வலயங்களாலும், இராணுவ முகாம்களைச் சுற்றிய பாதுகாப்பு வலயங்களாலும் இராணுவ முகாம்கள் விஸ்தரிப்பாலும் இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் இருப்பிடங்களையும், ஜீவனோபாயத்தையும் இழந்து அகதி முகாம்களில் அல்லற்படுகின்றன.

பெண்கள் தமது குழந்தைகளுடன் வறுமையின் எல்லைக்கோட்டில் வாடுகின்றனர். தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்கு முறையும் மனித உரிமை மீறல்களும் விரைவில் தீர்வதற்காகவும், சுபீட்சமான எதிர்காலத்திற்காகவும் பரந்தளவில் எம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் [illegible] உறுதிகொள்வோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**பொய்யாமொழி**

குறள்:

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பொருள்:

உலகத்து உயர்ந்தவரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர் பல நூல்களைக் கற்று இருந்த போதிலும் அறிவில்லாதவரே.

## 4 கோரிக்கைகளை முன் வைத்து இடது கம்யூனிஸ்ட் மே தினம்

யாழ்ப்பாணம், மே 1

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து மே தின ஊர்வலம் ஒன்றை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) இன்று நடத்துகின்றது.

● இனப் படுகொலைகளை உடன் நிறுத்துக.

● வடக்கு - கிழக்கை தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக ஏற்கு.

● சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்!

● தேசத்தின் சுதந்திரம் இறைமையை அமெரிக்க இஸ்ரேலியருக்கு தாரை வார்க்காதே.

மேற்கண்ட கோரிக்கைகளை முன் வைத்து இன்று காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலம் நல்லூரில் இருந்து ஆரம்பமாகிறது.

பகல் 11 மணிக்கு பொதுக் கூட்டம் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் நடைபெறும்.

## ஐக்கியமே தினம்
### இணுவிலிலிருந்து ஊர்வலம்
### பொதுக் கூட்டம் சுன்னாகத்தில்

யாழ்ப்பாணம், மே 1

வடபிரதேச தொழிற் சங்கங்களும் வெகுஜன அமைப்புக்களும் இணைந்து நடத்தும் ஐக்கிய மே தினம் சுன்னாகம் சந்தைக்கு அருகாமையில் பிற்பகல் நடைபெறும்.

ஊர்வலம் முற்பகல் பத்து மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயிலடியில் ஆரம்பமாகி சுன்னாகம் சந்தையைச் சென்று அடையும்.

இம் மே தின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் பங்குபெறும் அமைப்புக்கள் வருமாறு:

1. இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனம்.
2. ஈழவர் முன்னணி.
3. அரசாங்க பொதுச் சேவை தொழிற்சங்க சம்மேளனம்.
4. உழைக்கும் மக்கள் சனநாயக முன்னணி.
5. அரசாங்க லிகிதர் சேவை சங்கம்
6. யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை.
7. ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்.
8. சிவில் தொழிலாளர் நலன்புரி ஒன்றிலா
9. இலங்கை ஆசிரியர் சங்கம்.
10. விழிப்பு மன்றம்.
11 லங்கா தபால் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கம்.
12 மாதர் மறுமலர்ச்சி பேரவை.
13. இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்.
14. கிராமிய உழைப்பாளர் சங்கம்.
15. கல்வி நிறுவனங்களின் ஊழியர் சங்கம்.
16. கூட்டுறவு ஊழியர் சங்கம்.
17, கிராமிய முற்போக்கு பெண்கள் அணி
18. அகில இலங்கை தமிழ் பொது தாதிகள் சங்கம்.
19. கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்.
20. கடற் தொழிலாளர் நலன்புரி ஒன்றியம்.
21. தேசிய மாணவர் மன்றம்.
22. கிராமிய தொழிலாளர் சங்கம்.
23. வடபிரதேச போக்குவரத்து ஊழியர் சங்கம்.

### கடும் பரிசோதனை

யாழ்ப்பாணம், மே 1

யாழ். பிரதம தபால் நிலையத்தில் இருந்து கோட்டையில் இயங்கும் தபால் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட தபால் பொதி கோட்டையில் உள்ள சிப்பாய்களினால் கடும் பரிசோதனைக்கு உள்ளாகியது.

அதன் பின்பே தபால் பொதியை உள்ளே கொண்டு செல்ல இப்பாய்கள் அனுமதித்தனர்.

சம்பத்தில் அனுராதபுரத்தில் இடம்பெற்ற எரிபொருள் குதம் தகர்ப்புச் சம்பவத்தை அடுத்து யாழ் கோட்டை சிப்பாய்கள் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன் மே தினச் சிறப்பிதழ் உதயன் மே தினச் சிறப்பிதழ்

# ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு வழிகாட்டும் திருநாள்

## தொழிலாளர் தினமான மே தினம் தொடங்கி இன்று நூறுண்டு

இன்றைய சகாப்தத்தைப் பிரசவிப்பதற்கு வழிகோலிக் கொடுத்த பெரு நாள் மே தினம் என்று கூறினால் மிகையாகாது. இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் சிக்காகோ நகரிலே எங்கோ தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய தொழிலாளர் எட்டு மணிநேர வேலை மட்டும் தம்மால் செய்ய முடியும் என்று கிளப்பிய தொழிற் தகராறு 1886 மே முதலாம் திகதியன்று போர்க் கோலம் கொண்டது.

இப் போராட்டம் அன்று தனி ஒரு தொழிற்சாலையில் எழுந்த ஒரு தொழிற் தகராறைக் கோரிக்கையாக வைத்து நடைபெற்றதாயினும் இன்று இத் தினத்தின் தன்மை பெரிதும் விஸ்தீரணம் அடைந்துள்ளது.

காலப்போக்கில் இத் தினம் உலகெங்கும் வியாபித்த ஒரு பெரு நாளாகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் எழுச்சித் தினமாகவும் கூட பரிணமித்துள்ளது.

மேதினமென்று கூறும் பொழுது அது ஏதோ ஒரு தினத்தைக் கொண்டாடும் நிலையில் நின்று விடாது, ஓர் சர்வதேசமயமாக்கப்பட்ட இயக்கத்தைக் குறிப்பதாகி விட்டது.

மேதின இயக்கம் உலகத்தின் உழைக்கும் மக்களினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் உருக்கேறிய பேரணியும் ஆகிவிட்டது. இவ்வியக்கமானது வர்க்க அடிப்படையிலானதும் போராட்ட உணர்வுள்ளதும் புரட்சி வேட்கை கொண்டதுமாகி விட்டது.

இந்த நூறு ஆண்டு காலத்தில் தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்பட்ட மக்களும் இம் மேதின இயக்கத்தினை அடைந்து விட்ட நன்மைகள் தான் என்ன?

இதனை தெளிவுபடுத்த வேண்டியது இந்த நூற்றாண்டு வைபவங்களின் முக்கிய கடமையாகும்.

இந்த நூற்றாண்டு காலகட்டத்தில், உழைக்கும் மக்கள் தமது வர்க்கப் போராட்டங்களின் மூலமும் தத்துவார்த்த போராட்டங்களின் மூலமும் சில உண்மைகளை அறிந்துள்ளனர்.

தொழிலாளர்களை என்றும் அடிமைகளாக வைத்து அவர்களின் உழைப்பிலிருந்து கிடைக்கும் அபரிமித இலாபங்களை எல்லாம் சூறையாடி அவர்களின் மனித உரிமைகளை எல்லாம் மறுத்து, உழைப்பிற்கேற்ற ஊதியத்தைக் கொடாது, முதலாளி வர்க்கம் தமது நலன்களைப் பேணுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும்.

இந்த நிலையில் தொழிலாளி வர்க்கம் தமது நலன்களுக்கும் முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் இடையே, இன்றுள்ள சமூக அமைப்பில் தீர்க்க முடியாத முரண்பாடு உண்டு என்னும் உண்மையை உணர்ந்து விட்டது.

### மே தினமும் சுயநிர்ணயமும்

இதன் காரணமாகவே 1917 இல் ருஷிய நாட்டுத் தொழிலாளி வர்க்கமும் மற்றும் அங்கிருந்த ஒடுக்கப்பட்ட பல இன மக்களும் வறிய விவசாயிகளும் ஒன்றிணைந்து முதலாளித்துவ சமூக அமைப்பை புரட்சி செய்து வேரோடு களைந்தெறிந்து விட்டு தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சியான சோஷலிச அமைப்பை நிறுவினர். ஒடுக்கப்பட்ட விவசாயிகளுக்கும் பல்வேறு மொழி பேசும் இனங்களுக்கும் பரிபூரண சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் வழங்கினர். இன்று அந்நாட்டில் சுதந்திரமும் செல்வமும் கொழிக்க, கலை கலாசார வாழ்வு பூத்துக் குலுங்க மக்கள் இன்புற்று வாழ்வதைச் சகலரும் அறிவர். இது மேதினம் காட்டிக் கொடுத்த வர்க்கப் போராட்டப் பாதையில் மலர்ந்த வெற்றிவாகை அல்லவா?

நூறாண்டுகளின் முன் முதலாளியும் தொழிலாளியும் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்திலேயே இருந்தனர். இன்று அதே முதலாளி தனது வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்து ஏகாதிபத்திய சமூக அமைப்பை உருவாக்கியுள்ளான் அதே போல் அன்றிருந்த தொழிலாளியும் வளர்

(5ஆம் பக்கம் பார்க்க)

பொன். குமாரசாமி
மாவட்டச் செயலாளர்
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி)

## ஓங்கி உயர்ந்தது தொழிலாளர் செங்கொடி!

அமெரிக்க நாடதன் பாட்டாளி வர்க்கம்
அன்றொரு நாளாம் கண்விழித் தெழுந்தது
அகிலமெலாம் அதன் உரிமைக் குரல்
அதிரும் வண்ணம் ஓங்கி ஒலித்தது!

ஆலைக்குச் செல்வான் கோழி கூவும்
ஆலைவிட் டகல்வான் கோட்டான் கூவும்
ஆலயம் தொழவும் நேரமில்லை பலன்
ஆசை மனைவி ஏங்கியும் என்ன பயன்?

இரவும் பகலும் இருபத்து நாலுமணி
இதனில் பதினெட்டு மணிநேர கட்டாயவேலை
இரத்தமது தண்ணீராய் உழைத்திடல் வேண்டும்
இன்றேல் கண்ணீர்தான் மிஞ்சும் வேலை காலி!

ஈதென்ன கொடுமை இயந்திர யுகத்தில்
ஈவிரக்கம் எல்லாம் ஆலைக்குள் சமாதி
ஈயவும் மாட்டார் காலவிறு ஊதியம்
ஈசனை வழிபடும் ஆலையின் முதலாளி!

உழைப்பை வாங்கியவர் நகரமதன் மாடியில்
உழைப்பை ஈந்தவன் ஊரினது கோடியில்
உழைத்து களைத்தது கஞ்சிக்கும் போதா
உடலும் இளைத்து நலிந்ததே மிச்சம்!

ஊதினால் பறந்திடும் உழைப்பாளி மேனி
ஊதிப் பருத்தது முதலாளி வர்க்கம்
ஊழி யழைத்திடும் ஆலையின் சங்கொலி
ஊகித் தறிந்தது பாட்டாளி வர்க்கம்!

எட்டுத் திக்கும் தொழிலாளர் திரண்டனர்
எட்டு மணிநேரம் மட்டும் உழைத்திட
எடுத்தனர் முடிவாய் செயலில் இறங்கினர்
எந்திரம் யாவும் செயலற்று இழந்தன!

ஏட்டுப் படிப்பா எட்டு மணிநேரம்
ஏய்க்க முடியுமா எலும்புகள் எம்மை
ஏற்கவே மாட்டோம் ஒவ்வாச் செயலென
ஏசி உறுமிற்று அதிகார வர்க்கம்!

ஐயமே கொள்ளோம் உரிமை வெல்வோமென
ஐக்கிய அமெரிக்க சிக்காகோ நகரினில்
ஐக்கியமாக ஹே மார்க்கட் சதுக்கத்தில்
ஐயம் திரிபுற தொழிலாளர் முழங்கினர்!

ஒலித்தது எட்டு மணிநேர முழக்கம்
ஒலித்தது எதிராய் துப்பாக்கி வேட்டு
ஒலித்தது மீண்டும் உரிமை முழக்கம்
ஒலித்தது தொடர்ந்தும் துப்பாக்கி ஓசை!

ஓங்கி ஒலித்தது உரிமை முழக்கம்
ஓய்ந்து ஒழிந்தது துப்பாக்கி வேட்டு
ஓடிப் பாய்ந்த இரத்தம் தோய்ந்த
ஓங்கி உயர்ந்தது தொழிலாளர் செங்கொடி!

ஔவை சொன்னார் கொடுத்தார் பெரியோர்
ஔவை சொன்னார் கொடாதார் இழியோர்
ஔவை சொன்னது பிச்சையா? உரிமையா?
ஔடதம் போன்று அமைந்தது போராட்டம்!

அஃது அவ்வாறு தோன்றியதாம் மேதினம்!

(குறிப்பு: அன்றைய அமெரிக்க முதலாளித்துவத்தின் கொடுமையை விவரிக்கும் இம்மேதினக் கவிதை தொழிலாளரின் உயிரான போராட்டத்தை மனதில் கொண்டு உயிர் எழுத்துகளில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது)

- ம. க. அ. அந்தனிசில்

மின்சார, மின் அலைகளை
உங்கள் கட்டுப்பாட்டினுள் நெறிப்படுத்துங்கள்

TENBY
ரென்பி சுவிட்ச் வகைகள் நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலையில் விற்பனையாகின்றன.

S-LON
பைப்புகள் அதற்கான சகல அமைப்புக்களும் நெளிவுகளும் பொருத்துகளும் விற்பனைசெய்யப்படுகின்றன.

அலங்கார மின் விளக்குகள், மின் அடுப்புகள்,
தென்றல் வீசிடும் மின் விசிறிகள், மின் குமிழ்கள்.
விவசாயத் தோழன் நீர் இறைக்கும் இயந்திரம்.
இக்கால தேவை எதுவோ, அதுவே எமது விற்பனை சேவை.

SUNDHARSON
MARKET VIEW, MANIPAY.
Dealers in Electrical Accessories

லிங்கா எலெக்ரிக்கல்ஸ்:
4 அடி 2 அடி ரியூப் லைற் செற்றுகளும் வட்ட ரியூப் லைற்றுகளும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சுந்தர்சன் உங்கள் உத்தரவாதம்! சுந்தர்சன் சிறப்புமிகு சேவை!!

சகல விதமான தளபாடச் சாமான்களுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்
மொடேர்ண்பேணிச்சர்
79/2 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகல வாடிக்கையாளர்களுக்கும்
எமது மேதின வாழ்த்துக்கள்
இயந்திரம்ஸ்
336, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24062

* ரயர் வகைகள்,
* யந்திர உதிரிப்பாகங்களின்
ஏக விநியோகஸ்தர்கள்
சுபமாலா மோட்டேர்ஸ்
79, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23520

சகல தொழிலாளர்களுக்கும்
எமது மேதின வாழ்த்துக்கள்
பிறைற் ரியூசன் சென்ரர்
செம்பியன் லேன், இல, ரெம்பிள் வீதி,
கொக்குவில். கொக்குவில்.

உங்கள் வாழ்விலே ஒரு பொன் நாள்! அந் நாளே நீங்காத நினைவுநாள்!
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல வைபவங்களை எந்நாளும்
தத்ரூபமான வர்ண அழகில் காலமெல்லாம் பார்த்து மகிழ்ந்திட
******* வீடியோ விஷன் VIDEO VISHON *******
213, POWER HOUSE ROAD, JAFFNA. T'Phone: 22477
சகலவிதமான பழைய/ புதிய வீடியோ நிகழ்ச்சிகளையும் வீடியோ ரெக்கோடிங் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்.
● வீடியோ விஷன் ● VIDEO VISHON ● வீடியோ விஷன் ● VIDEO VISHON ● வீடியோ விஷன் ● VIDEO VISHON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தொழிற்சங்க வளர்ச்சியில் தமிழர் ஆற்றிய பெரும் பங்கு

## இனப்பாகுபாடு பின்னர் அவர்களை தனிவழி செல்வதற்கு வழியிட்டது

பிரித்தானிய ஆட்சியின் போது மலைநாட்டில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபின்பே இலங்கையில் கணிசமான தொகையினராக தொழிலாளர் பரிணமிக்கத் தொடங்கினர். இதன் பின்பே தொழிற் சங்க இயக்கம் தோன்றவும் வளரவுமான வாய்ப்புக்கள் உருவாகின.

மலைநாட்டு தோட்டத் தொழிலாளர் தமிழராகவும் இந்தியர்களாகவும் இருந்தனர். தோட்டங்களுக்குள் முடங்கி வாழ்வதே அவர்கள் வாழ்வாக இருந்தது. ஆயினும் 1920 ஆம் ஆண்டு காலத்திலேயே அவர்களிடையே தொழிற்சங்க உணர்வையும் போராட்ட மனப்பான்மையையும் வளர்க்கக் கூடிய விதத்தில் கோ. நடேச ஐயர் செயற்பட்டார். அவர் அக்காலத்தில் தோட்டத் தொழிலாளரிடையே செல்வாக்கு மிகுந்த தலைவராக விளங்கினார்.

அனேகமாக அதே சமகாலத்தில் 1923 ஆம் ஆண்டு திரு ஏ. ஈ. குணசிங்கா கொழும்பில் லேபர் யூனியன் (Labour Union) என்ற பெயரில் நகரத் தொழிலாளர்களை தொழிற்சங்க அமைப்புக்குள் கொண்டு வந்தார்.

### நடேச ஐயரும் குணசிங்காவும்

கொழும்பின் துறைமுகம், புகையிரத திணைக்களம், மற்றும் தனியார் வர்த்தக நிலையங்களில் கணிசமான அளவு தொழிலாளர் இருந்தனர். இவர்களில் சிங்களவரும் - தமிழரும் (பெருமளவு இந்திய மரபு வழியினர்) இருந்தனர். இவர்களும் திரு. குணசிங்காவின் தொழிற்சங்கத்தில் சேர்க்கப்பட்டனர்.

1925 ஆம் ஆண்டு மலைநாட்டு தோட்டத் தொழிலாளரிடையே தொழிற்சங்கப் பணியாற்றி வந்த நடேச ஐயர் திரு. குணசிங்காவின் லேபர் யூனியனில் அதன் துணைத்தலைவராக சேர்ந்தார். 1927ல் நடைபெற்ற கொழும்புத் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது நடேச ஐயரின் பணியின் காரணமாக மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர் கொழும்பு துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரித்தனர். ஆனால் திரு. குணசிங்காவின் சிங்கள - பௌத்த மனப்பான்மை விரைவிலேயே வெளிப்படத் தொடங்கிவிட்டது. அதனால் நடேச ஐயர் மிகக் கடும் வார்த்தைகளால் திரு. குணசிங்காவை விமர்சித்ததுடன் திரு குணசிங்காவை இந்திய விரோதி என்றும்-சிங்கள-பௌத்த வகுப்புவாதி என்றும் 1928லேயே கண்டித்தார். திரு. நடேச ஐயர் லேபர் யூனியனிலிருந்து 1928 ல் வெளியேற்றப்பட்டார். அடுத்த ஆண்டு 1929 ல் திரு குணசிங்காவின் லேபர் யூனியன் சகல இந்தியர்களையும் அங்கத்தவர் பதவியினின்றும் நீக்கியது. சிங்கள-பௌத்த மேலாதிக்க உணர்வு ஆரம்பத்தில் இந்திய விரோதமாக ஆரம்பித்து ஈற்றில் தமிழர் விரோத உணர்வாக பரிணமிப்பது தொழிற்சங்கத் துறையிலும் சரி அரசியலிலும் சரி நாம் காணக்கூடிய ஒரு போக்காக இருக்கிறது.

### இலங்கை இந்தியர் காங்கிரஸ்

இதன் பின்பு தொழிலாளரிடையே திரு. குணசிங்காவின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. தொழிற்சங்க இயக்க வளர்ச்சியில் மார்க்சிய இடதுசாரி கருத்துக்



1947 பொதுவேலை நிறுத்தத்தில் பலியான தியாகி கந்தசாமி.

கொண்டவர்கள் கூடுதலான ஈடுபாடு காட்டினார்கள். லங்கா சமசமாஜ கட்சியினர் பல தொழிற்சங்கங்களை உருவாக்கி செயற்பட்டு வந்தனர். இது 1930 ஆம் ஆண்டுகளில் இருந்த நிலை ஆயினும் இக்காலகட்டத்திலும் மலைநாட்டு தோட்டத் தொழிலாளர் பிறிதான தொழிற்சங்க இயக்கத்திலேயே ஸ்தாபனரீதியாகினர். இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் இயங்கும் தொழிற்சங்கங்கள் அன்று இலங்கை இந்தியர் காங்கிரஸ் என்ற பெயரில் இயங்கி மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளரின் தொழிற்சங்க அமைப்பாகவும் அரசியல் அமைப்பாகவும் கூட பரிணமித்தது.

### அ. லி. சே. சங்கம்

மலைநாட்டுத் தோட்ட தொழிலாளரிடையேயும் கொழும்பு போன்ற நகரப்பகுதிகளிலே துறைமுகம், புகையிரதப்பகுதி போன்றவற்றில் ஏனைய தொழிலாளரிடையேயும் தொழிற்சங்க இயக்கம் பரவி வந்த காலத்தில் அரசாங்க சேவையிலும் தனியார் நிறுவனங்களிலும் கூட-ஆங்கிலக் கல்வியும்-அதன் மூலம் வெளியுலக அறிவும் கொண்டவர்களாக விளங்கிய பெருமளவு எழுதுவினைஞர் போன்ற சேவையைச் சேர்ந்தவர்கள் பெருமதி தொடங்கினர். இவர்கள் ஏனைய தொழிலாளரிலும் கல்வி அறிவில் மேம்பட்டவர்களாக இருந்தமையால் தாமே சுயமாகத் தொழிற்சங்கங்களை உருவாக்க முனைந்தனர். அவர்களில் சிலர் மறைமுகமாக இடதுசாரி இயக்கங்களின் தூண்டுதல் பெற்றிருந்தார்கள். இவ்வகையில் முதன்மையானதாக விளங்கியது G. C. S. U. என அழைக்கப்படும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம்,

இச்சங்கத்தின் ஆரம்ப காலத்தில் சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடு பாராட்டப்படவில்லை. இருசாராரும் ஆங்கில மொழிகற்றவர்களாகவும் ஆங்கிலத்திலேயே வேலை செய்பவர்களுமாயிருந்தனர் ஜீ. சி எஸ் யூ வின் முதல் தலைவராக திரு ஈ. ஜே. இராஜரட்ணம் என்பவரே விளங்கினார் 1931 ஆம் ஆண்டளவில் இச்சங்கம் உருவானது. ஆனால் அங்கீகரிக்கப்படவில்லை

### கந்தசாமியின் மரணம்

1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின் போது இச்சங்கம் முக்கிய பங்கு வகித்தது. அக்காலை இச்சங்கத்தின் தலைவராக-தற்போதைய மக்கள் கட்சித்தலைவரும் முன்னாள் அமைச்சருமான திரு டீ. பி இலங்கரத்தின விளங்கினார் செயலாளராக திரு. சோ. வன்னியசிங்கம் விளங்கினார். இவ்வேலை நிறுத்தத்தின் போது கொலன்னாவையை நோக்கிச் சென்ற ஊர்வலத்தின் மீது பொலிஸார் சுட்டபோது திரு. கந்தசாமி பலியானார். கந்தசாமியின் மரணம் தொழிற்சங்க வரலாற்றில் ஒரு பெரிய தாக்கத்தை உண்டு பண்ணியது. திரு. இலங்கரத்தின வேலை நீக்கம் செய்யப்பட்டார். இவர் விரைவிலேயே அரசியலில் குதித்தார் கண்டியில் நடைபெற்ற இடைத் தேர்தலின் போது வெற்றியும் பெற்றார். இவரின் அரசியல் வெற்றிக்கு ஆரம்பத்தில் துணை நின்றது இவரது தொழிற்சங்க செல்வாக்கு எனக் கூறலாம்.

அதன் பின்பும் ஜீ சி. எஸ் யூ. ஒரு முன்னோடி தொழிற் சங்கமாகத் திகழ்ந்தது. திரு. சே. வைகுந்தவாசன், ஏ. ஆர். ஆசீர்வாதம் போன்றோர் தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக அரச சேவையினின்றும் நீக்கப்பட்டனர். அதன் பின்பு இச்சங்கத்தை கட்டி எழுப்பியவர்களிடையே திரு. கே. சி. நித்தியானந்தா முக்கியமானவராவார் ஆனால் கால ஓட்டத்தின் வேகத்தில் அவரை ஓர் சாதாரண அங்கத்தவராகக்கூட அச்சங்கம் கணிக்காமல் விட்ட கதை இந்நாட்டில் புரையோடியிருக்கும் இனவாதத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

1956 ஆம் ஆண்டு திரு பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் என்ற கோஷத்துடன் அரசு கட்டில் ஏறினார். இதனால் ஏற்படக்கூடிய தாக்கத்தை உணர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர் தமக்கு பாதுகாப்பு தேட முற்பட்டனர் ஏனெனவே இலங்கை சுதந்திரம் அடைந்த பின் முதலில் சிங்கள பௌத்த ஏகாதிபத்திய உணர்வுக்குப்பலியானவர்கள் மலைநாட்டு தமிழ்த் தொழிலாளர் என்ற விடயம் எல்லாத் தமிழ் தொழிலாளர்களையும் விழிப்புடன் இருக்க வைத்தது.

1957 இல் நடைபெற்ற பொது வேலை நிறுத்தத்தின்போது அப்போதைய கல்வி அமைச்சர் திரு தஹநாயக்கா 'செல்லையாக்களும் - சின்னையாக்களும்'' என்று பச்சை வகுப்புவாதம் பேசியதும்- அப்போதைய அமைச்சர் திரு பிலிப் குணவர்தனவின் ஆதரவாளரில் சிலர் எனக் கூறப்பட்டோர் வேலை நிறுத்தக்காரருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டதும் - போன்ற நிகழ்வுகளும் தமிழ் ஊழியரிடையே மிகுந்த தாக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

**செ. கோடீஸ்வரன்**
(சட்டத்தரணி)

## மே தினம் தோன்றியது எப்படி?

மே மாதம் முதல் திகதி உலகிலுள்ள தொழிலாளர்களின் நல உரிமையை நினைவுபடுத்தும் தினமாக இன்று கொண்டாடப்படுகிறது. இது இருபதாம் நூற்றாண்டில் அரசியல் மாறுபாட்டினால் ஏற்பட்டது. ஆனால் மே தினத்தை மேலை நாடுகளில் பல நூற்றாண்டுகளாகவே கொண்டாடி வருகின்றார்கள். எப்படி? மே தினம் என்றால் மகிழ்ச்சி அளிக்கும் நாள். கேளிக்கைத் தினம் என்பதாகும்.

* புராதன ரோமானியர்கள் காலத்தில் மே தினத்தன்று, கனிகளுக்கும் மலர்களுக்கும் தேவையான 'ப்ளோரா' வைக் கௌரவிப்பதற்காக இளைஞர்களும் யுவதிகளும் வயல் வெளிகளை நோக்கி ஆடிப்பாடிக் கொண்டு போவார்கள். மத்திய காலத்தில் மக்கள் மே தினத்துக்கு முதல் நாள் மாலையே கானகத்துக்குச் சென்று விருந்தும் கேளிக்கையுமாக இரவை அங்கேயே கழிப்பார்கள். அதிகாலையில் பசுமையான இலைகளோடு கானகத்திலிருந்து ஊர் திரும்புவார்கள். தங்கள் வீட்டு வாசலை அந்த இலைகளால் அழகுபடுத்துவார்கள்.

* மே தினத்தன்று அதிகாலை வேளையில் புல் இலைகளின் மீது படிந்துள்ள பனித்துளி அழகை அதிகரிக்கச் செய்யும் அருமருந்தாக நம்பப்பட்டது. ஆகவே, பெண்கள் அதிகாலையில் எழுந்து தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் போய் பனித்துளிகளைச் சேகரித்து முகத்திலும் உடலிலும் பூசி மகிழ்வார்கள்.

* கடந்த நூற்றாண்டில் மே தினம் எப்படிக் கொண்டாடப்பட்டது தெரியுமா? இலை, தழை, மலர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கோபுரம் போன்ற கூண்டுக்குள்

(5ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஆ. அன்ரன் போல்

சகல வாடிக்கையாளர்களுக்கும்
எமது மேதின வாழ்த்துக்கள்
மற்று பேணிச்சர்
87, 137, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

* மின்சார உபகரணங்கள்
* மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள்
* எஸ்லோன் பைப் வகைகள்
யாவும் ஒரே இடத்தில் பெற்றிட
விஜயம் செய்யுங்கள்
சிவா எலக்ரிக்கல்ஸ்
635, கே கே எஸ். வீதி,
நாச்சிமார் கோயில் வீதி,
கொக்குவில்.

பாட்டாளி வர்க்கத்திற்கு எமது
உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்
*
WHITEFIELD INDUSTRIES
COLOMBO -- CHANKANAI.

சகல வாடிக்கையாளர்களுக்கும் எமது
மேதின வாழ்த்துக்கள்
சரஸ்வதி
எலக்ரிக்கல் வேக்ஸ்
151, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

சகல வாடிக்கையாளர்களுக்கும்
எமது மேதின வாழ்த்துக்கள்
*
நிஹானிஸ்
பன்சி கவுஸ்
72, புதிய சந்தை,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்
யாழ்நகரில் தரமான வர்ண புகைப்படப் பிரதிகள்
கம்பியூட்டர் முறையில் --- குறைந்த செலவில் --
துரிதசேவையில் பெற்றுக் கொள்ளவும்
KONICA - FUJI - KODAK - SAKURA
தரமான வர்ண புகைப்பட சுருள்களை பெற்றுக் கொள்ளவும்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
(பிரைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ARTHE JEWELLERS
III, KASTHURIAR ROAD,
JAFFNA.
போன்: 23628

உழைக்கும் கரங்களுக்கு
எமது வாழ்த்துக்கள்
ஆனந்தா புத்தகசாலை
226, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22348.

எஸ். பி. எஸ்.
ரான்ஸ்போட் சேவிஸ்
★
யாழ்ப்பாணம் --- கொழும்பு
கொழும்பு --- யாழ்ப்பாணம்
★
இல:—
27, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்; தொலைபேசி: 24238
112, டாம் வீதி, கொழும்பு-12. தொலைபேசி: 20487




மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் நற்பணிக்கே உதவுகின்றது.
மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் உண்டு.
மேலுறைகளை சேகரியுங்கள்.
மில்க்வைற் தொழிலகம்
யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 77 — தொலைபேசி: 23233



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தொழிலாளர் தமது உரிமைகளை உறுதி செய்த நாள்

## மேதினத்தின் வெளிப்பாடு

இன்றைய தொழிற்சங்கங்களின் பலமும் செல்வாக்கும் அளப்பரியது. அவற்றின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுத்தே ஆகவேண்டும்.

பேச்சுமேடைகளிலென்ன, தொழிற் தலங்களிலென்ன, எங்களிலு


**எங்கள் தேவை**

தேவை

பழரசம், யாம் எமைக் தயாரிப்பதற்கு மிகவும் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. Seven Hills, 222 (76), மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மே மாதம் 5ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.


நிலைபத்திலிருந்தாலென்ன பிழைகளைச் சரிப்படுத்தவும் தொழிலாளர் சமுதாயத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளை அடியோடு அகற்றவும் அவர்களால் முடியுமென்பது இன்று நாம் கண்ட அனுபவம்.

உலகிலுள்ள பாட்டாளிமக்கள் அனைவரும் சாதிமத, இனபேதமின்றி பெருமையுடன் கொண்டாடும் மேதினம் உலகத் தொழிலாளர் வரலாற்றிலேயே ஓர் ஒப்பற்ற தினம்.

தங்களுடைய உரிமைக்காக நடத்திய வீரப் போராட்டத்தின் வெற்றியைக் குறிக்கும் உயர்தனித் திருநாள்தான் மேதினம். தொழிலாளர் வரலாற்றில் இது ஒரு மைல் கல்லாக விளங்குகிறது.

ஆரம்பகாலத்தில் இரவு பகலாக ஓய்வுறக்கமின்றி 12 முதல் 16 மணித்தியாலம்வரை வாடுபட்டான் பாட்டாளி. அவனும் அவனது மனைவி மக்கள் தொழிற்சாலையில் மிருகங்களிலும் மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர். பழுதலையும் மூலப் பொருளாகவே மனித உழைப்பும் கணிக்கப்பட்டுவந்தது.

தொழிலாளியின் ஐந்து விரல்களில் ஒன்று முறிந்தால் மிகுதி நான்கு விரல்கள் உண்டுதானே

பொறுத்தது போதுமென்று பொங்கி எழுந்தான் தொழிலாளி.

அந்தப் போராட்டத்தின் வெளிப்பாடாய் உருவானதுதான் மே தினம்.

முதலாளி தொழிலாளியைச் சுரண்டி வாழ்ந்த காலம் மலையேறிவிட்டது.

பாடுபடுபவனுக்கே இந்தப் பாரிடம் சொந்தம் என்ற சித்தாந்தம் பிறந்துவிட்டது.

கலப்பை பிடிக்கும் கையையே உலகம் நம்பியிருக்கிறது. கொல்லரும் தச்சரும் கூடாமல் கூடமும் மாடமும் வீடாமா; குசவன் செய்யும் பாண்டமின்றி குடித்தனம் நடை

**- பிரான்சிஸ் எம். யோசேவ் -**

எனச் சாந்தம் கூறிய காலமது.

சுகாதாரமற்ற சூழலில், பாதுகாப்பற்ற இயந்திரங்கள் மத்தியில் நேரக்கட்டுப்பாடின்றி, நஷ்டஈடின்றி வேலை செய்து வந்தான் அன்றைய தொழிலாளி.

ஆளும் உலை நீக்கும் மனித தர்மத்துக்கு ஒவ்வாத இந்நிலை நீண்டகாலம் நிலைபெற்றிருக்க முடியவில்லை.

நெஞ்சில் உரமிருந்தது; பெறுவது எங்ஙனம்? கட்டும் ஆடையாகப் பருத்தி தானே வாய்த்தவிப்பதில்லை.

எனவே தொழிலாளர்களாவும் பொருளாதார சக்கரத்தின் சிலைக்கம்புகளாக அமைந்துள்ளனர். ஒருவன்செய்யுந்தொழிலே தான் தெய்வமாகிறது. எனவே நாம் வாழ வேண்டுமெனில் தொழில்கள் வளரவேண்டுமென்ற உறுதிப்பாட்டுடன் உழைப்போமாக.

## ஒடுக்கப்பட்ட ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
சியடைந்து இன்று உலக சோஷலிச முகாமை அமைத்து விட்டான்.

எனவே அன்று தொழிற்சாலை மட்டத்தில் இருந்த முரண்பாடு இன்று பூகோளம் முழுமையிலுமே வியாபித்துள்ளது.

இன்று உலக மட்டத்தில் ஏகாதிபத்தியமும் அதன் துணைபோகும் பிற்போக்கு சக்திகள் ஒரு புறமும், சோஷலிச நாடுகளும் தேசிய விடுதலை இயக்கங்களும் சர்வதேச தொழிலாளி வர்க்கமும் மற்றும் ஒடுக்கப்பட்டுள்ள அனைத்து மக்களும் மறுபுறமுமாக அணிவகுத்து நிற்பதை நாம் காண்கின்றோம். இதுவும் மேதினம் வகுத்துக் கொடுத்த வர்க்கப் போராட்டத்தின் உச்சக்கட்டமாகும்.

இன்னும் உன்னிப் பார்க்கும் பொழுது, தேசிய இனப் போராட்டங்களை வர்க்கப் போராட்டங்களிலிருந்து தனிமைப்படுத்தச் சில முதலாளித்துவ தேசியவாதிகள் முனைகின்றனர். இவ்விரு போராட்டங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை மேதினம் உலகுக்குக் காட்டியுள்ளது.

**அக்டோபர் புரட்சி**

மே தினம் ஆரம்பித்து வைத்த வர்க்கப் போராட்டத்தின் உச்சக்கட்டமே ருஷிய நாட்டில் கிளர்ந்தெழுந்த மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி. இப்புரட்சி தான்முதல்முதலில் நூறுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசும் பல்வேறு தேசிய இனங்களுக்கும் குழுக்களுக்கும் பிரிந்து போகும் உரிமை உட்பட, சுயநிர்ணய உரிமையை வழங்கியது.

இது வரலாறு கண்ட உண்மை.

எனவே தான் மகத்தான அக்டோபர் புரட்சியை தேசிய விடுதலையின் மூலகாரணமாக உலகம் கணிக்கின்றது. மேலும் இன்றும் கூட தேசிய விடுதலைக்காக குரல் கொடுக்கும் மாபெரும் சக்தியாக சோஷலிச நாடுகள் விளங்குகின்றன.

எனவே தேசிய இன விடுதலைக்கும் வர்க்க விடுதலைக்கும் இடையே முரண்பாட்டைக் காண்பவர்கள் உண்மையிலும் முதலாளி வர்க்கத்தின் நலன் விரும்பிகளே. வர்க்கப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் வெற்றியீட்டிவிட்டால் விடுதலையடையும் தேசிய இனங்கள் தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிச அமைப்பிற்குட்பட்டு விடும் என்று ஏங்கித் தவிக்கும் முதலாளித்துவ தேசிய வாதிகளே இவர்கள்.

**இலங்கையில் ...**

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதெனில் அது யூ. என். பி. ஆட்சியுடன் பேசிட்டு அவர்களிடமிருந்தே இத்தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அசையாத நிலைப்பாட்டினைக் காணக்கூடியதாகவுள்ளது

மறுபுறம் யூ. என். பி. ஆட்சியை வேரோடு களைந்தெறியாது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியமில்லை என்று தொழிலாளி வர்க்கம் கருதுகின்றது. இதற்கு மே தினம் காட்டும் வழிதான் வர்க்கப் போராட்டத்தில் நாம் பரிபூரண நம்பிக்கை கொண்டிருக்கவேண்டும். ஏனெனில் அதுவே இனப் பிரச்சினைக்கு மட்டுமல்ல, மக்களின் சகல சமூகப் பிரச்சினைகளுக்கும் திருப்தியான தீர்வுகளை வென்றெடுத்துக் கொடுத்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாதையாகும்.

வர்க்கப் போராட்டப் பாதையை மேற்கொள்வது கால தாமதமாகிவிடுமே என்று சிலர் கலக்கமடைகின்றனர்.

ஆம், அக நிலைக் காரணிகள் வேகமாகத் தீர்வு காண வேண்டும் என்று தூண்டுகின்றன. ஆனால் புறநிலைக் காரணிகள் இழுபறியாய்த்தான் இருக்கின்றன. அவையாவன:- தமிழ் தேசிய இனத்திற்கு ஏகோபித்த தலைமைப்பீடம் இல்லாமை; போராளிகள் இடையே ஐக்கியமின்மையும் பரஸ்பர பகைமையும்; இந்தியாவின் உறுதியற்ற நிலைமை.

மறுபுறத்தில் யூ. என். பி. அரசின் மூலோபாயம் இலங்கையிலுள்ள சகல சிறுபான்மை இனங்களும் சிங்கள இனத்துடன் சங்கமமாக வேண்டுமென்பதே. ஒரு இனம், ஒரு மொழி, ஒரு மதம் — இவையே இதன் நோக்கம்.

இதனை அடைவதற்கு இவ்வரசு கையாளும் தந்திரோபாயம், தமிழ் பேசும் மக்களை தனித்துவமான ஓர் தேசிய இனமாக அங்கீகரிக்க மறுப்பதும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையை மறுப்பதுமாகும்.

எனவே மே தினம் காட்டிய வர்க்கப் போராட்டப் பாதையே இந்நாட்டு தொழிலாளி வர்க்கமும் ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களும் தமது உரிமையை வென்றெடுக்க கையாள வேண்டிய வழியாகும்.

இன்று இலங்கையில் உள்ள பிரச்சினைகளில் முன்னணியில் நிற்கும் பிரச்சினை இனப்பிரச்சினையே. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வெகுசனப் போராட்டங்கள் துவங்க வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியுள்ளது. ஆயுதப்படையினரின் அத்துமீறல்களும், அரசின் ஒடுக்கு முறைச் சட்டங்களினால் தமது தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலையில் மக்கள் தவித்தலும் கொள்ளைக் கூட்டத்தினரின் தொல்லைகளாலும் அகதி முகாம்களில் தவித்தலும் என்று இன்னோரன்ன இன்னல்களால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு விடிவெள்ளி போன்று இம்முறை மே தினம் அமையவுள்ளது.

## மே தினம் தோன் ...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)
ஒரு மனிதன் புகுந்து கொண்டு வீதிகளில் பவனி வருவான். இந்த நடமாடும் தழைக் கோபுரத்தோடு ஒரு பெண் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் வருவாள்.

* முன் காலத்தில் மே தினத்தைக் கொண்டாட மிக உயரமான மே தினக் களியாட்டக் கம்பங்களை நகரின் நடுவில் ஊன்றுவதையே ஒரு விழாவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். கானகத்திலிருந்து இதற்கென்று மிக உயர்ந்த மரங்களை வெட்டிக்கொண்டு வருவார்கள். இருபதிலிருந்து நாற்பது காளைகள் வரை இழுத்து வருமாம் இம் மரங்களை. அப்படியானால் இந்த 'மே போல்கள்' எத்தனை உயரமாக இருந்திருக்க வேண்டும்? காளைகளின் கொம்பில் காட்டு மலர்கள் கட்டப்பட்டிருக்கும். 'மே போல்' கம்பத்தைச் சுற்றி மலர்களும் வண்ண ரிபன்களும் சுற்றப்பட்டிருக்கும். இரண்டாம் சார்ல்ஸ் மன்னர் காலத்தில் 134 அடி உயரம் உள்ள 'ஸெடார்' மரத்தாலான 'மேபோல்' கம்பம் நிரந்தரமாகவே ஊன்றப்பட்டதாம். இம் மரத்தைத் தேம்ஸ் நதியில் மிதக்கச் செய்து கொண்டு வந்தார்களாம்.

* பொய்க்கால் குதிரை போல் மே தினத்தன்று 'ஹாபி ஹார்ஸ்' என்ற கோமாளிகள் ஆட்டம் போட்டபடி தெருவில் பவனி வந்து மக்களை மகிழ்விப்பார்கள்.

## இலங்கையில் தொழிற்சங்க ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
சத்தை உண்டு பண்ணியிருந்தது.

இந்நிலையில் திரு. பண்டாரநாயகாவின் அரசு போய் திருமதி. பண்டாரநாயகாவின் அரசு வந்தது. அவ்வரசு வகுப்பு வாதத்தில் திரு. பண்டாரநாயகாவிற்கு சவால் விடுவதாக அமைந்தது. தமிழ் ஊழியரின் தொழில் உரிமை கடப்பறிக்கப்படும் நிலைக்கு வந்தது. இந்நிலையில் ஜீ சீ எஸ் யூ விலிருந்த தமிழர் தமது தொழில் உரிமையை பாதுகாக்கும்படி சங்கத்தை வேண்டிய பொழுது - சங்கம் தமிழ் ஊழியர் நிலையை பாதுகாக்க மறுத்துவிட்டது.

அந்நிலையில் தமிழர் ஜீ. சீ. எஸ். யூவிலிருந்து மிகப் பெருமளவில் விலகத் தொடங்கினர். ஜீ சீ. எஸ் யூவின் திருகோணமலைக்கிளையே கலைக்கப் பட்டது. தொழிற் சங்கங்களிடையே வியாபித்து வளர்ந்திருந்த சிங்கள வெறிக்கு உதாரணமாக தமிழ்மொழி உபயோக விதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்தையும் கூறலாம்.

**மொழி வழித் தொழிற் சங்கங்கள்**

இதைத் தொடர்ந்து 1961 ஆம் ஆண்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் என்ற பெயரில் ஒரு தொழிற் சங்கத்தை தமிழ் எழுதுவினைஞர் ஆரம்பித்தனர். இதன் முதல் தலைவராக திரு. க. சிவஞானசுந்தரம் விளங்கினார். முதல் பொதுச் செயலாளராக திரு. இ. பாலசுப்பிரமணியம் விளங்கினார்.

இச் சங்கம் தமிழ் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக்கவும், அவர்கள் உரிமைகளுக்காகப் போராடவும், அதே நேரத்தில் இன விரோதங்களுக்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்றும் கொள்கை வகுத்து செயற்பட்டது. தமிழ் தொழிலாளர்களை தனிச் சங்கங்கள் அமைக்கும்படியும் தமக்குள் ஒற்றுமை ஏற்படுத்தும்படியும் வலியுறுத்தியது. "மொழிவழி பிரிந்தால் வாழ்வோம் - இன்றேல் வீழ்வோம்" என்ற கோஷத்தை இச் சங்கம் முன்வைத்தது.

இச் சங்கத்தின் பணியினாலும் உழைப்பினாலும் உந்தப்பட்டு பல்வேறு தமிழ் தொழிலாளரிடையேயும் பல தொழிற் சங்கங்கள் தோன்றின. சற்றில் இவை ஒன்றுபட்டு சம்மேளனமும் உருவானது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் ஏனைய மொழி வழித்தொழிற் சங்கங்களும் சிங்கள இனவெறிப்போக்கிற்கு பெருமளவில் தாக்குப்பிடித்து வந்தன. இதன் காரணமாக கோடீசுவரன் மொழிவழக்கில் சிங்களம் மட்டும் அந்நேரத்து அரசியல் யாப்பிற்கு முரணானது என்ற தீர்ப்பை பெறக் கூடியதாகவிருந்தது இவ்வழக்கின் வெற்றி தமிழ் தொழிலாளருக்கு மட்டுமல்லாது தமிழினத்திற்கே ஒரு உற்சாகத்தையும் வெற்றியையும் அளித்தது. தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்தும் - தமிழின ஒழிப்பை எதிர்த்தும் இத் தொழிற் சங்கங்கள் நடத்திய போராட்டத்தில் மிக முக்கியமானது - கட்டாய சிங்கள திணிப்பை எதிர்க்கும் முகமாக சிங்களம் படிக்க மறுத்து நின்றதாகும். இப் போராட்டத்தால் பதவி இழந்தோர் பலர். அவர்களில் முக்கியமாக நினைவு கூரப்படக்கூடியவர் இருவர் - ஒருவர் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் துணைச் செயலாளராகவும் - சங்க செய்தி இதழான "எழுச்சி"யின் ஆசிரியராகவும் விளங்கி பழுத்த பழமாகவிலாது வாழும் வயதிலேயே நெடும் பயணம் சென்றுவிட்ட குரும்பசிட்டி க. பத்மநாதன்; மற்றவர் நவீன திரு. என். சுரேந்திரநாதன்.

**ஸ்தம்பித நிலையில்**

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினதும் - இதர மொழிவழித் தொழிற் சங்கங்களினதும் தோற்றத்துக்கு சந்தர்ப்பமாய் அமைந்தது. இதர தொழிற் சங்கங்களின் தமிழர் விரோதப் போக்கும் - கழுத்தறுப்பும் காரணமாய் அமைந்தது. இந்நாட்டின் வரலாறு - இயற்கை - மக்கள் மனப்பான்மை - தன்மை சிங்கள - பௌத்த மேலாதிக்க இனவாதம் என்பன இன மொழி கடந்த வர்க்க ஒற்றுமை என்பது வெறும் கானல் நீர்.

இதைத் தெளிவாகக் கூறியவர்களுள் முக்கிய மானவர் ஜீ சீ. எஸ். யூ. வை. அதன் ஆரம்ப காலங்களிலேயே சம சமாஜக்கட்சியின் செல்வாக்குக்குள் வைத்திருப்பதற்காக சமசமாஜக் கட்சியின் முகவராக பணியாற்றியவர் என கருதப்பட்ட திரு. ஜி. ஆர். குணநாயகம்.

தமிழ் அரசாங்க ஊழியரின் முதலாவது கூட்டம் வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தில் 1961 ஆம் ஆண்டு நடைபெற்றது. அங்கு பேசிய அவர் அக்கூட்டம் தமிழர்களை எப்படி கௌரவமாக அரச சேவையிலிருந்து வெளியேற்றுவதென்பதை ஆராய கூட்டப்பட்டதாக தெளிவாகக் கூறினார்.

இலங்கையின் எல்லாத் துறைகளிலும் போலவே தொழிற் சங்கத்துறையிலும் சிங்களவர் வேறு - தமிழர் வேறு என்ற நிலை உருவாகிவிட்டது. எந்த தொழிற் சங்கமும் நாட்டு நிலையை மீறிச்செயற்படமுடியாது. ஜெயவர்த்தனா அரசு வந்தபின் 1980 வேலைநிறுத்தத்திற்குப் பின் தமிழர் தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஸ்தம்பித நிலையை அடைந்து விட்டன. இவை மீண்டும் [illegible] வேண்டுமானால் [illegible] பெற்றாக வேண்டும்.


உழைக்கும் வர்க்கத்திற்கு எங்கள் உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

★

பெற்று எசன்ஸ் சப்ளையர்ஸ்
223, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24823.

உழைக்கும் வர்க்கத்திற்கு இதோ "கிளீன் கட்" வழங்கும் அரியதோர் சேவை!

தரமான போட்டோஸ்ரட் பிரதிகள்,
தெளிவான ஆங்கில, தமிழ் தட்டெழுத்து வேலைகள்
விரைவான ரேனியோ பிரதிகள்
அத்தோடு பெண்கள், குழந்தைகளுக்கான தையல் வேலைகள்.
இவற்றைப் பெற்றிட நாடுங்கள்!

'கிளீன் கட்'
239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22823

தோலகட்டி
அறிவித்தல்

வியாபாரிகளுக்கும் பாவனையாளருக்கும் ஓர் முக்கிய அறிவித்தல்
நெல்லிரசம்-முந்திரிகைரசம்

மீண்டும் பாவனையாளர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் அன்புடன் வலியுறுத்துகின்றோம். எமது பெயர்கொண்ட போலி லேபல்கள் மீண்டும் யாழ்நகரிலும் வெளியிடங்களிலும் தலைகாட்டத் தொடங்கியுள்ளன என்பதை எமது பிரதிநிதிகள் தகுந்த ஆதாரத்துடன் எமது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். ஆகவே தற்போது உள்ள சூழ்நிலையில் போலிகளுக்கும் ஏமாற்றுப் பேர்வழிகளுக்கும் மிகவும் ஆபத்தான காலம் என்பதை நினைவில் கொண்டு மிக எச்சரிக்கையாக எமது லேபல்களின் போலிகளை வாங்க வேண்டாமென தாழ்மையுடன் வியாபாரிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய கவனிப்பு:—
எமது லேபல்களில் மணிக்கூட்டுக் கோபுரம் உண்டு அதில் நேரம் 6 20 மணியைக் காட்டுகின்றது (லேபல்களை உன்னிப்பாகக் கவனிக்க)

மேலும் விவரங்களுக்கு:—
பணிப்பாளர்,
செபமாலை தாசர் சபை,
தோலகட்டி, வயாவிளான்.

ஜோ. எகட்டன்
(செனித் மார்கட்டிங்)
யாழ்நகர்.

வாடிக்கையாளர்களுக்கு எமது மேதின நல்வாழ்த்துக்கள்!
உங்கள் பல், கண் பரிசோதனைகளுக்கு நாடுங்கள்!

பி. மொறய்ஸ்,
50, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சிறந்த சிற்றுண்டி வகைகளுக்கும் குளிர்பானவகைகளுக்கும் இன்றே நாடுங்கள்!
சிவானந்த கபே
268, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உழைப்போர் உலகம் வாழ
எமது வாழ்த்துக்கள்
★
குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
42, 44, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23034

தொழிலாளர் தினமாகிய இன்று எமது நாட்டின் முதுகெலும்பாகிய தொழிலாளருக்கு இம்மேதினத்தில் எமது வாழ்த்சலிய வந்தனங்கள்!

ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
யாழ்நகர்

உள்ளூர் உற்பத்திகளின் விநியோக முன்னோடிகளும் பொதுஜனத் தொடர்புச் சாதனங்களின் விளம்பர முகவர்களும்
-Zenith Advt.

பாட்டாளி மக்களுக்கு எமது மேதின வாழ்த்துக்கள்
இன்றே நாடுங்கள்

GLOBE INDUSTRIES
** 'GRAFO' INK
** 'GLOBE' INK

தங்கள் அச்சகத்துக்குத் தேவையான எல்லா நிற மை வகைகளும் 'கிராவோ' (GRAFO) - 'குளோப்' (GLOBE) ஆகிய இனங்களில் எம்மிடம் பெற்றுக்கொள்வதுடன் அச்சகத்துக்குத் தேவையான காகிதாதிகளும் எம்மிடம் விசேஷ கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

APPROVED DEALERS FOR
"NATIONAL PAPER CORPORATION"
173, 4th CROSS STREET,
JAFFNA.
TELEPHONE: 23187

வாழ்க பாட்டாளிகள்!


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கட்டிட ஆலோசனைகள்
0 கட்டிடப் படங்கள் வரைதலும்
0 செலவு மதிப்பிடலும்
0 ஒப்பந்த அடிப்படையில் கட்டிடம் அமைக்கவும்
கல்வித் தகைமையும் அனுபவமும் மிக்க எமது
பொறியியலாளர்களின் சேவையை நாடுவீர்!
**Dynamic Eng., Ltd.**
476, பிரதான வீதி, கண்டுகுளி.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

**உதயன்**

01 05 1986 வியாழக்கிழமை

தொழிற்சாலைகளில்
இயந்திர சாதன பராமரிப்பு, திருத்த
வேலைகள், புதிய இயந்திரங்களை
வடிவமைத்தலும் உருவாக்குதலும்
ஆகியவற்றுக்கு அனுபவம் மிக்க எமது
பொறியியலாளர்களின் சேவையை நாடுவீர்!
**Dynamic Eng, Ltd.**
476, பிரதான வீதி, கண்டுகுளி.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

# சுவிஸில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

### 4 தமிழீழ இயக்கங்கள் ஒன்றுசேர்ந்து நடத்தின

பேர்ன், ஏப்ரல் 30

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முயற்சியை ஆட்சேபித்து சுவிஸ் தலைநகரில் சத்தியாக்கிரகங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் ஏப்ரல் 10 ஆம் திகதியில் இருந்து 18 ஆம் திகதி வரை நடத்தப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய இயக்கங்கள் இவற்றை ஒழுங்கு செய்து நடத்தின.

பிரைட்வேவ் மண்டபத்தில் இறுதி நாள் பொதுக் கூட்டமும் நடந்தது.

இந்த சத்தியாக்கிரகம், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் சுமார் 1 000 இலங்கைத் தமிழ் அகதிகளும் சுமார் 300 சுவிஸ் நாட்டவரும் கலந்து கொண்டனர்.

சத்தியாக்கிரகத்தில் தினமும் சுமார் 150 அகதிகள் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் கூட்டத்தில் சுவிஸ் நாட்டில் உள்ள இடதுசாரி அரசியல்வாதிகளும் கலந்து கொண்டு பேசினர். தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதை நிறுத்தும்படி சுவிஸ் அரசாங்கத்தை அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

# கந்தளாய் அழிவு: சிறு விஷயமாக காட்ட இலங்கை அரசு முயற்சி

## நோர்வே செஞ்சிலுவை சங்க அதிகாரி கூறுகிறார்

ஒஸ்லோ, ஏப்ரல் 30

கந்தளாய் குள அணைக்கட்டு உடைப்பெடுத்ததினால் ஏற்பட்ட அழிவை சின்ன விஷயமாகக் காட்ட இலங்கை அரசு முயல்கிறது.

நோர்வே நாட்டுச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி திரு. ஒடின்ரான், ஒஸ்லோவில் செய்தியாளர் மத்தியில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கந்தளாய் அனர்த்தத்தை நேரில் பார்த்த திரு ஒடின்ரானும் அவரது குழுவும் நோர்வே திரும்பிய பின்னர் இச் செய்தியாளர் மாநாடு நடத்தப்பட்டது.

கந்தளாய் அனர்த்தத்தில் 2,500 பேரைக் காணவில்லை. 7,800பேர் வரையில் வீடிழந்து விட்டனர். நிவாரண நடவடிக்கைகள் தாமதமாகவே எடுக்கப்படுகின்றன.

இப்படி திரு. ஒடின்ரான் சொன்னார்.

இதனிடையில் கொழும்பில் அவசரமாகக்கூடிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கக்குழு, 2500 பேர் காணமல் போய் விட்டதாக வெளிவந்த செய்தியை மறுத்துள்ளது.

## அ. தி. மு. க. மே தினவிழா ரத்து

யாழ்ப்பாணம். மே 1

இலங்கை அ. தி. மு.க. அனுசரணையுடன் 14 அமைப்புகள் ஒன்று கூடி நடத்த இருந்த மே தின விழா ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற அமைப்புக் குழுக்களின் விசேஷ கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

## புலிகளுக்கு புளொட் அனுதாபம்

யாழ்ப்பாணம், மே 1

கடந்த 26-4-86இல் சிறிலங்கா கடற் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பலியாகிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்போராட்டத்தில் இழப்புக்களைத் தவிர்க்க முடியாதவை ஆனாலும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான இழப்புகள் ஜீரணிக்க முடியாதவை. இந்நிலையில் தோழர்களின் இழப்பு என்பது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பல்ல, தமிழ் பேசும் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகவே கருதுகிறோம்.

போராளிகளின் இழப்பில் துயருற்றிருக்கும் தோழர்களின் துன்பத்தில் நாமும் பங்கேற்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

மட்டக்களப்பு, மே 1

வந்தாறுமூலையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நிகழ்த்தைத் தோண்டுகையில் வெடிதாக்கி மரணமான இரண்டு தமிழர்களின் சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை. சிறுவடையினரின் உத்தரவின்மீது இந்த நபர்கள் நிலத்தைத் தோண்டுகையிலே வெடிதாக்கி மரணமானார்கள்.

இவர்கள் பற்றிய மரண விசாரணையை சந்திவெளி முகாமில் ஏறுவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கந்தசாமி நடத்தினார்.

டாக்டர் வி. பஞ்சலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## வர்த்தகர் கடத்தப்பட்டு விடுதலை

நல்லூர், மே 1

வர்த்தகர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார்.

யாழ் நகரில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றின் உரிமையாளரே கடத்திச் செல்லப்பட்டவராவர்.

இச் சம்பவம் நேற்றுப் பகல் நடைபெற்றது.

## சிப்பாய்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எப்பட்டது.

இதனால் இருவர் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குழந்தை ஒன்றும் இச் சம்பவத்தில் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. தோட்டவேலை செய்து கொண்டிருந்தவர்கள் சிதறி ஓடினார்கள்.

பலாலிச் சம்பவத்தில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

சுப்பிரமணியம் தேமிநாதன் (25 வயது) இராஜரட்ணம் சிவகுமார் (13 வயது). இருவரும் உளாய் வாசிகள்.

# பிடிவிருந்து! ஊர்காவல் அதிகாரிக்கு

மட்டக்களப்பு, மே. 1

காத்தான்குடி பாடசாலை அதிபர் ஒருவரைத் தாக்கியதான வழக்கில் தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படும் சந்தேக நபர்மீது மட்டக்களப்பு நீதிபதி ஜனாப். எம். ஹரியப்பர் வாரண்ட் பிறப்பித்தார்.

ஊர்காவல் படைப் பொறுப்பு அதிகாரியான ஏ. எஸ். பதுறுதீன் என்பவர் மீதுதான் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்ட இரண்டு ஊர்காவல் படைவீரர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## பரந்தனில் மே தினம்

கிளிநொச்சி, மே 1

இலங்கை வர்த்தக சங்கத்தின் வட பிரதேசக் கிளைகள் நடத்தும் மே தின ஊர்வலமும்பொதுக் கூட்டமும் இன்று பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

ஊர்வலம் பரந்தன் சந்தியில் ஆரம்பமாகி பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன விளையாட்டு மைதானத்தை வந்தடையும்

## காயமடைந்த பெண் மரணம்

நல்லூர், மே 1

ஹெலிக்கொப்டர் தாக்குதலில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவர் 14 நாட்களுக்குப்பின் நேற்று மரணமானார்.

கடந்த 16ஆம் திகதி கட்டுவனில் இடம்பெற்ற இத்தாக்குதலில் காயமடைந்திருந்த சுப்பிரமணியம் பொன்னம்மா (60 வயது) என்பவரே மரணமானவர் ஆவார்.

## ஜனதா தலைவர்

புதுடில்லி, ஏப் 30

ஜனதா கட்சியின் தலைவராக சந்திரசேகர் இன்று (புதன்கிழமை) மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

## இளைஞர்கள் கோஷ்டி .'

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை இரவு நிகழ்ந்த மோதலில் வீடு ஒன்று மோசமாக சேதமாக்கப்பட்டது. வீட்டினுள் இரத்தக்கறைகள் காணப்பட்டன.

பிரஸ்தாப வீட்டின் முன்னால் வீதியில் கார் ஒன்று முற்றாக எரிந்த நிலையிலும், வீதியோரத்தில் இரண்டு மரங்கள் கருகிய நிலையிலும் காணப்படுகின்றன.

மரத்தில் எரிந்த சைக்கிள் ஒன்று தொங்கிய நிலையில் காணப்பட்டது.

எரிந்த காருக்கு அருகில் மனித உறுப்புகள் சிலவும் கருகிய நிலையில் காணப்பட்டன.

வாகனங்கள் சேதம்

ஆரியகுளம் சந்தி, நீராவியடி, கல்வியங்காடு, கட்டைப்பிராய், கோப்பாய் உட்பட பல இடங்களில் வாகனங்கள் பல எரிந்த நிலையில் காட்சியளித்தன.

குடாநாட்டின் பல பகுதிகளில் ஆயுதங்கள் சகிதம் இளைஞர் கோஷ்டிகள் ரோந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

வேறு பல வாகனங்கள் ஆயுதங்கள் ஏதுமின்றி வெள்ளைக் கொடி பறக்க விட்டவாறு நகரில் நடமாடின.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் சம்பந்தப்பட்ட இரு கோஷ்டிகளுக்கு இடையில் மோதல் இடம் பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவில் நிகழ்ந்த மோதல் ஒன்றின் நடுவில் அகப்பட்டு காயமடைந்த பொதுமக்களில் ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்.

## இணைப்பாட் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காண்பதற்கு முன் யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படவேண்டும்.

யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்வதற்கு பொதுவான சக்தி ஒன்று ஈடுபடுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு இந்தியத் தூதுக்குழுவிடம் இந்து இயக்கங்கள் சம்மேளன தூதுக்குழு சுட்டிக்காட்டியுள்ளதாக மேலும்தெரிய வருகிறது.

## யூனியன் பிரதேசம் . . ,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னதாவது:

வடக்கு-கிழக்கு இணைப்பு முக்கியமானது. யூனியன் பிரதேச அமைப்பை ஏற்றுக்கொள்ள முடியாது.

சமஷ்டி அரசமைப்பின் வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு மாநில அமைப்பையே தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகிறது.

இந்த அமைப்புக்கு காணிக் குடியேற்றம், பொலிஸ், சட்டம் - ஒழுங்கு சம்பந்தமான சகல அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். [illegible]

தற்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளது. தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். — இவ்வாறு டாக்டர் நீலன் திருச்செல்வம் இந்தியக்குழுவிடம் எடுத்துச் சொன்னார்.

மீண்டும் இன்றும் சந்திப்பு

இன்று (வியாழன்) காலை மீண்டும் டாக்டர் நீலன் திருச்செல்வம் இந்தியக் குழுவை [illegible] பேச்சுக்கள் நடத்து[illegible] பார்க்கப்படுகிறது.

# மனிதவளம், ஆள்திரட்டும் அமைச்சு ஜனாதிபதியிடம்

கொழும்பு, மே 1

மனித வளம், ஆள் திரட்டும் அமைச்சு, ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் ரணில் விக்ரமசிங்காவின் கீழ் தான் இந்த அமைச்சு இதுவரை இருந்து வந்தது.

இப்பொழுது ஜனாதிபதியின் கீழ் இது கொண்டு வரப்பட்டுள்ளது.

திரு. ரணில் விக்ரமசிங்க பிரதி அமைச்சராக இருந்து இந்த அமைச்சைக் கவனித்துக் கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## லங்கா சிமெந்து மே தினம்

யாழ்ப்பாணம் மே 1

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் ஸ்தாபனத்தில் கடமையாற்றும் தொழிலாளர்களின் மேதினக் கூட்டம் இன்று காலை எட்டு மணிக்கு சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்க மணிமனைக்கு அருகாமையில் நடைபெறும்.

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் தொழிற்சாலைக் கிளையின் தலைவர் திரு. எல் கே. ஜோதிபாலா தலைமையில் இக் கூட்டம் நடைபெறும்.

## சிதம்பரம் குழுவினருடன் வந்த பாடகர் கோஷ்டி

கொழும்பு, மே 1

அரசு நடத்தும் மே தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வட-இந்தியப் பாடகர்கள் கோஷ்டியும் நடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு வந்து சேர்ந்தது.

இணை அமைச்சர் திரு. சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழுவுடனேயே பாடகர் கோஷ்டியும் வந்தது.

கல்யாணி, அனுபமா, பூர்ணிமா, மீரா, ஹாபி, அருண் ஆகியோர் பாடகர் கோஷ்டியில் அங்கம் வகிக்கின்றனர்.

## தொழில் நுட்பக் கல்வி

புதிய 86/87 கல்வி ஆண்டு வைகாசி மாதம் ஆரம்பமாகின்றது. இலத்திரனியல், மின்சாரவியல, இயந்திரவியல, கட்டிடப்பொறியியல், கொம்பியூட்டர் துறைகளின் டிப்ளோமா வகுப்புகள் லண்டன் City & Guilds Institute பரீட்சைகளின் தராதரத்தில நடத்தப்படுகின்றன. G. C. E. [O. L] சித்தியடைந்த இருபாலாரும்10-5-86க்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பப் பத்திரங்களை ரூ 5/ - செலுத்தி காரியாலயத்திலிருந்து பெறலாம்.

**Director,**
JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE
VADDUKKODDAI

### நீங்காத பட்டியல்

## த. சந்திரகாந்தன்

த. சந்திரகாந்தன் (சந்திரன்) ஸ்ரான்லி எலெக்ரிக் வெல்டிங் வேக்ஸ் யாழ்ப்பாணம், சென்யோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட உத்தியோகத்தர் 30-4-1986ல் அகால மரணமானார். இவர் முடமாவடி தம்பிராசா (ரெயிலர்) இராசமணி தம்பதிகளின் மூத்த புதல்வனும், சத்தியபாமாவின் அன்புக் கணவரும், வதனபிரசாந்தின் அன்புத் தந்தையுமாவார். நாவாந்துறை கட்டிட ஒப்பந்தக்காரர் சந்தசாமி நல்லம்மாவின் மூத்த மருமகனும், இரஞ்சினி, சிறிகாந்தன், பாலசூரியன், ஆனந்தசூரியன், வசந்தினி, சுகந்தினி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரெஜினாவின் மாமனும், அருளப்பு (டுபாய்) சிவஞானம் (பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்) செல்வஞானம் (சிங்கப்பூர்) நவஞானம் (ஜேர்மனி) இரவீந்திரன் (கிங்மா பம்ஸ். நாவற்குளி) இராசேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சுகிர்தா, சிறிதரன் (ஜேர்மனி), வனஜா, இரஜீவன், ஜெயகுமார், சுரேஸ் (ஜேர்மனி) தனீஸ்வரன், விக்கினேஸ்வரன், அருணு, சுகுணு, ஆகியோரின் மைத்துனரும் நாகமணி (C T B றைவர்) ஆறுமுகம் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் சமக்கிரியைகள் இன்று முதலாம் திகதி பிற்பகல் 2 மணியளவில் கோக்குவில் குடும்ப மயானத்தில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.


முடமாவடி. தகவல் : நா சிவஞானம்

## இதோ ஓர் நற்செய்தி

பாவனையாளர்களின் நலன்கருதி மீண்டும் றொபின் சோப்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| றொபின் பார்சோப் | 12.50 |
| றொபின் வெள்ளைசோப் | 2.00 |
| றொபின் நீலசோப் | 2.00 |
| றொபின் பேபி வெள்ளை 50 துண்டுகள் பைக்கற் | 40.00 |
| றொபின் பேபி நீலம் 50 துண்டுகள் பைக்கற் | 42.50 |

வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.




**பெனின்சுலா** சவர்க்காரத் தொழிலகம்
9, கண்டி வீதி, நாவற்குளி.

எல்லா வகையிலும் தரமானதும்
சுவையானதுமான தயாரிப்புகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்
ஐஸ்கிறீம் வகைகள், ஐஸ் சொக், ஐஸ்ஜெலி,
பலுதா (PALUDA), புருட்சலட், குளிர்பான
வகைகள், சிற்றுண்டி வகைகள்
மற்றும்
பிறந்ததினம், திருமணம், களியாட்டவிழா
வைபவங்களுக்கான கேக் வகைகள், பீடா
அனைத்தையும் குறித்தநேரத்தில் ஓடர்செய்து
பெற்றுக்கொள்ளவும். சுவைத்து மகிழ
டவர் ஸ்பெஷல் ஐஸ்கிறீம்களுக்கும்
யாழ்நகரின் சிறந்த இடம்
**டவர் கிறீம் ஹவுஸ்**
324, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23891

உலகத் தொழிலாளர் திருநாளாம்
**மே தினமான இன்று**
பாட்டாளிகள் நலன் ஓங்க
வாழ்த்துகிறோம்!
★
**நிதித்துறையில்**
உங்கள் நம்பிக்கையுள்ள
நண்பன்
Your Friends in Finance
**"ஷப்ரு"**
யுனிக்கோ(f)பினான்ஸ் லிமிட்டெட்
'SHABRA' Unico Finance Ltd.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 1? ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியீட்டு திகதி 01 - 05 - 1986.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number Q J 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org